Registered as a Newspaper பக்கங்கள் 16 விலை ரூ. 50

உதயன்

சுடர் : 38
கதிர் : 320

வியாழக்கிழமை 12 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 25 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



உலகக் கிண்ணக் கொண்டாட்டம்
பக் :- 08-09

# சீனாவின் தந்திரத்துக்குள் சிக்கக்கூடாது இலங்கை!



## இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கையில் வைத்து எச்சரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 12

இலங்கை போன்ற இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் நடைமுறைச் சாத்தியமற்ற திட்டங்களையும் தீர்க்கமுடியாத கடன்களையும் பெற்று சீனாவின் கடன்பொறிக்குள் சிக்கிக்கொள்ளக்கூடாது என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார். »15

# சீனக் கடன் சீரமைப்பு: நீடிக்கின்றது இழுபறி!

## தமக்கு எதுவும் தெரியாது என கைவிரித்தது ஐ.எம்.எப்.

கொழும்பு, ஒக்.12
இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையே கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் விசேட உடன்பாடு எதுவும் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பாக தமக்குத் தெரியாது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. »14

# பல்கலைக்கழக விடுதிகளில் இனிமேல் திடீர்ச் சோதனை!

கொழும்பு, ஒக்.12
பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிகளில் இரவுவேளைகளில் திடீர்ச் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் இராகவன் »14

# இந்தியப் பிரதமருக்கு மீண்டும் ஒரு கடிதம்!

யாழ்ப்பாணம், ஒக்.12
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து எமது நிலைமைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தி, தீர்க்கமான முடிவை எட்டுவதற்காக 7 கட்சித் தலைவர்கள் »14

# சைக்கிளில் இருந்து வீழ்ந்தவர் மரணம்!

யாழ்., ஒக்.12
சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்து படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
பருத்தித்துறையைச் சேர்ந்த பிலிப் இராஜசிங்கம் (வயது-52) என்பவரே உயிரிழந்தவராவார்.
கடந்த 7ஆம் திகதி காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக இவரைச் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ளனர்.
சைக்கிள் பின்னிருக்கையில் »15



# ஓட்டோச் சாரதிகள் யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.12
முச்சக்கர வண்டிச் சாரதிகளால் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
தனியார் நிறுவன ஒன்லைன் சேவையால் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படு »15

# நஷீரின் இடத்துக்கு அலி சாஹிர்

கொழும்பு, ஒக்.12
நஷீர் அஹமட்டின் வெற்றிடமாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அலி சாஹிர் மௌலானா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
அவர் தெரிவு செய்யப்பட்டமைக்கான வர்த்தமானி »15

# உள்ளவற்றையும் பறிக்கும் உடனடிக் கடன் செயலிகள்

## கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.12
இணையம் ஊடாக உடனடிக் கடன் வழங்கும் செயலிகள் தொடர்பாக பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று »15

# ரணிலுக்கு வழங்கும் ஆதரவை மீள்பரிசீலனை செய்ய நேருமாம்!

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12
எனது ஆதரவைத் தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவது என்பது, அவரின் செயற்பாடுகளைப் பொறுத்தே இருக்கின்றது. »15

# இலங்கை - இந்தியா இடையே 3 ஒப்பந்தங்கள் கைச்சாத்து!

கொழும்பு, ஒக்.12
இலங்கை - இந்தியா இடையே 3 ஒப்பந்தங்கள் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டதுடன், இந்தியக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டத்தை இணையம் ஊடாக ஆரம்பிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் »15



## மருத்துவத் தவறால் சிறுமியின் கை துண்டிப்பு

# சந்தேகநபர்களை வழக்கில் பெயரிடுமாறு கோரிக்கை!

## அடுத்த மாதம் ஒத்திவைத்தது மன்று

யாழ்ப்பாணம், ஒக்.12
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சலுக்காகச் சேர்க்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் கை அகற்றப்பட்ட »15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றுலாத் திறன் விருத்தி இலவசப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஒக். 12

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுற்றுலாத்துறை சார்ந்த சேவை வழங்குநர்களின் திறன் விருத்திக்காக இலவசப் பயிற்சிநெறியை நடத்துவதற்கு வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் திட்டமிட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் முச்சக்கரவண்டி, வாடகைக் கார், சிறிய வாகன, பெரிய வாகன உரிமையாளர்கள், நினைவுச் சின்னங்கள் தயாரிப்பாளர்கள், கைவினைப் பொருள்கள் உற்பத்தியாளர்கள், தங்குமிட உரிமையாளர்கள், உணவக உரிமையாளர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் உள்ளிட்ட சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய சேவை வழங்குநர்கள் பங்குபற்றிப் பயன்பெறமுடியும்.

இதனூடாக சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட திறனை விருத்தி செய்வதுடன் சேவையின் தரத்தையும் அதிகரித்துக்கொள்ளமுடியும். அத்துடன் சிறந்த தொழில் முயற்சியாளர்களின் வெற்றிப் பயணங்களின் அனுபவப் பகிர்வும், வட மாகாண சுற்றுலாப் பணியகத்தால் வழங்கப்படவுள்ள அடையாள அட்டை ஆகியவற்றையும் பெறமுடியும்.

பயிற்சிநெறியில் பங்கேற்க வலிகாமம் வடக்குப் பிரதேசத்தைச்சேர்ந்த ஆர்வமுள்ளவர்கள் 0212217311, 0778449742 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தொடர்பு கொண்டோ அல்லது tourismnorth.srilanka@gmail.com எனும் முகவரி ஊடாகவோ தமது விவரங்களை எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பதாக சமர்ப்பித்துப் பதிவு செய்யுமாறு தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (ச-66)

# தேர்தலை ஒத்திவைப்பது தவறான நடவடிக்கை

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

**ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால் அது தவறானதொரு முடிவாகவே இருக்கும். உரிய நேரத்துக்குள் அந்தத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

மஹிந்த ராஜபக்ச, கண்டி தலதா மாளிகைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருவதாக வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மஹிந்த மேற்கண்டவாறு கூறினார்.

'இதுதொடர்பில் எனக்கு அறியக் கிடைக்கவில்லை. ஆனால் அவ்வாறு ஒத்திவைக்கப்பட்டால் அது தவறு. உரிய நேரத்துக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும். மக்கள் எமது பக்கம் நின்று ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகின்றேன்' எனவும் அவர் குறிப் பிட்டார். மொட்டுக் கட்சியின் தலைமைப்பதவி குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, எதிர்காலத்தில் நிச்சயம் மாற்றம் வரும், எந்த நாளும் என்னால் பதவியில் இருக்கமுடியாது அல்லவா?' என அவர் பதில் கேள்வி எழுப்பினார். (ஒ-44)

# ரணிலின் ஆட்சியை கவிழ்க்கமாட்டோம்

## பெரமுன திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 12

ஜனாதிபதியை நெருக்கடிக்குள்ளாக்கி ஆட்சியைக் கவிழ்க்கும் திட்டம் தமது கட்சிக்குக் கிடையாது என்று பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

மொட்டுக்கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன அரசுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் எஸ்.எம்.சந்திரசேன மேலும் தெரிவித்ததாவது:

ரோஹித அபேகுணவர்த்தன, நான் உட்பட மொட்டுக் கட்சியின் மாவட்டத் தலைவர்களே இந்த அரசை உருவாக்கப் பெரும் பாடுபட்டனர். எனவே, அந்த அரசில் எமக்கான உரிய இடம் கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் உள்ளது. ஆகவே, இது தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தவேண்டும்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டைக் கையளித்தோம். கடும் சவால்களுக்கு மத்தியிலும் அவர் அந்தப் பணியை முன்னெடுக்கின்றார். அதற்கு நன்றிகள், தமக்கு அரசியல் ரீதியில் உதவும் நபர்கள் குறித்தும் அவர் கவனம் செலுத்தினால் இப்படியான அறிவிப்புகள் வெளிவராது.

நெருக்கடியான சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானது முதல் இன்றுவரை அவருக்கு ஒத்துழைப்பை வழங்கிவருகின்றோம். ஜனாதிபதியை நெருக்கடிக்குள் தள்ளவும், ஆட்சியைக் கவிழ்க்கவும் நாம் திட்டமிடவில்லை. மனக் கவலையையே ரோஹித வெளியிட்டுள்ளார் - என்றார். (ஒ-44)

# கொக்குவில் நூலகத்தால் மாணவர்களுக்குப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 12

தேசிய வாசிப்பு மாதம் - 2023ஐ முன்னிட்டு நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட கொக்குவில் பொதுநூலகம் 'உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது' எனும் தொனிப்பொருளில் மாணவர்கள் மத்தியில் பல போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

முன்பள்ளிச்சிறார்கள் முதல் தரம் - 4 வரையான மாணவர்களுக்கு நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவிலும், தரம் - 5 தவிர்ந்த தரம் - 13 வரையான ஏனைய மாணவர்களுக்கு 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவிலும் பொது நூலக மண்டபத்தில் போட்டிகள் இடம்பெறும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கொக்குவில் பொது நூலகத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு கொக்குவில் பொதுநூலக நூலகர் தெரிவித்துள்ளார். (ஒ-66)

# மாணவர்களுக்கான உதவிகளுக்கு கோரிக்கை

தெல்லிப்பழை, ஒக். 12

பொருளாதார நெருக்கடி காரணமாக கற்றலைத் தொடர்வதற்கு இடர்படுகின்ற மாணவர்களின் நலன்கருதியும் அவர்களது கற்றல் செயற்பாடானது குடும்பப் பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்படுவதை தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலும் உதவிகளை வழங்கத் தொண்டு நிறுவனங்கள் சமூக அமைப்புகள் மற்றும் நலன் விரும்பிகளிடம் வலி. வடக்குப் பிரதேச செயலகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெளிமாவட்டங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தற்பொழுது கல்வி கற்கும் மாணவர்களுக்கு தற்போது உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மடிக்கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் சில மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டியுள்ளமையால் சமூக நலன் சார்ந்த செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க ஆர்வம் உள்ள தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# மலசலகூடம் மதுபோதையில் உடைப்பு

கொடிகாமம், ஒக். 12

பிரதேசசபையால் வழங்கப்பட்ட மலசலகூடத்தை மது போதையில் வந்தவர் அடித்து நொருக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் தவசிகுளம் பகுதியில் இடம்பெற்றது.

பிரதேசசபை உறுப்பினரின் முயற்சியால் வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்ட மலசலகூடம் அந்தக் குடும்பத்தினரால் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதே வீட்டில் வசிக்கும் மருமகன் மதுபோதையில் வந்து அலவாங்கால் மலசலகூடத்தை உடைத்துச் சேதமாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## தமிழகத்திலிருந்து

# தாயகம் திரும்பிய மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 12

தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைந்து சட்டவிரோதமான முறையில் கடல் வழியாகத் தாயகம் திரும்பிய மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. வடமராட்சி கிழக்கு குடத்தனையைச் சேர்ந்த தாய் மற்றும் அவரது இரு பிள்ளைகளும் போர்ச் சூழல் காரணமாக 1990 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தஞ்சமடைந்திருந்தனர். 33 ஆண்டுகளின் பின்னர் படகுமூலம் அவர்கள் தாயகம் திரும்பி குடத்தனை வடக்குப் பகுதியில் தங்கியிருந்த நிலையில் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

குறித்த மூவரையும் நேற்று புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 13ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-100)

# சங்கிலி அறுப்பு; 4 பேர் கைது

காணி எல்லையிடல் தொடர்பான முரண்பாட்டில் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துச் சென்ற 4 பேரை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாகப் பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

பலாலி கிழக்கிலுள்ள காணியினுள் எல்லையிடல் நடவடிக்கைக்காக 50 வயதான பெண் சென்றுள்ளார். அதேவேளை குறித்த காணி தமக்குரியது என அங்கிருந்த 4 பேர் வாதிட்டிருந்தனர். இந்த வாய்த்தர்க்கத்தின்போது பெண்ணின் சங்கிலியை 4 பேரும் அறுத்துச் சென்றதாக பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து கிளிநொச்சி மற்றும் மல்லாகத்தைச் சேர்ந்த 30 முதல் 35 வயது மதிக்கத்தக்க 4 பேரை பொலிஸார் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து சங்கிலியையும் மீட்டுள்ளனர். (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்குள் ஊடுருவிய இருவர் நேற்றுக் கைது!

மன்னார், ஒக். 12

**இலங்கையில் இருந்து படகு மூலம் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவிய மன்னாரைச் சேர்ந்த இருவர் தேடப்பட்டுவந்த நிலையில் குறித்த இருவரும் நேற்றுப் புதன்கிழமை மரைன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முனைக்காடு கடற்கரைப் பகுதியூடாக அதிவேகத்தில் பயணித்த படகொன்றிலிருந்த மன்னாரைச் சேர்ந்த இருவர், தமிழகத்துக்குள் நேற்றுமுன்தினம் ஊடுருவியநிலையில், அவர்களை பொலிஸார் தீவிரமாகத் தேடிவந்தனர்.

இந்த நிலையிலேயே சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-100)

## உடைமையில் ஹெரோய்ன் சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 12

கைக்குண்டு மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை துன்னாலையில் மறித்து பொலிஸார் சோதனையிட்டனர்.

இதன்போதே அவர்களிடமிருந்து கிரனைட் கைக்குண்டு ஒன்றும் 6.50 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது கைக்குண்டு தொடர்பான குற்றச்சாட்டை நீதிமன்றம் நிராகரித்தது. ஹெரோய்ன் போதைப் பொருள் தொடர்பான வழக்கில் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-25-100-26-20)

## சங்கிலியை அறுத்தவர் துன்னாலையில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 12

வசாவிளான் பகுதியில் பெண்ணொருவரின் சங்கிலியை அறுத்துச் சென்ற குற்றச்சாட்டில் துன்னாலையில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

வசாவிளான் மத்திய கல்லூரி முன்புறமாகவுள்ள வீதியினூடாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பெண்ணொருவர் பயணித்த நிலையில் மோட்டார்சைக்கிளில் முகக்கவசம் அணிந்து வந்த இருவர் குறித்த பெண் அணிந்திருந்த சங்கிலியை பெண்ணிண் முதுகில் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தி அறுத்துச்சென்றனர்.

இதுதொடர்பில் பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் சந்தேகநபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் இனங்காணப்பட்டு சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவர் பயணித்த மோட்டார்சைக்கிளும் கையகப்படுத்தப்பட்டது. சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை பலாலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)



## கட்டுப்பாட்டை மீறிய விலை வர்த்தகர்களுக்குத் தண்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 12

கட்டுப்பாட்டு விலையை மீறி சம்பா அரிசி மற்றும் முட்டையை விற்பனை செய்த இரண்டு வர்த்தகர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையினர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் நெல்லியடிப் பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொண்டபோது குறித்த இரு வர்த்தகர்களும் கட்டுப்பாட்டு விலையை மீறி பொருள்களை விற்பனை செய்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே அவர்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (ம-100)

## இளைஞனைத் தாக்கி ரூ.10 இலட்சம் கொள்ளை

சாவகச்சேரி, ஒக். 12

இளைஞனைத் தாக்கி அவரிடமிருந்து தங்க நகைகள், கைக்கடிகாரம், தொலைபேசி மற்றும் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய அறுவரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி கொள்ளைச் சந்தேகநபர்கள் தொலைபேசி ஊடாக இளைஞனை மறவன்புலவுக்கு வரவழைத்துள்ளனர்.

அங்கு இளைஞனைத் தாக்கி அவரிடமிருந்த நாலரைப் பவுண் தங்க நகைகள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், கைக்கடிகாரம் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அதன்பெறுமதி 10 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், சிலாபத்தைச் சேர்ந்த 3 பெண்களும், கனகராயன்குளத்தைச் சேர்ந்த இரு ஆண்களுமாக ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

நகைகளைக் கொள்வனவு செய்த வவுனியாவைச் சேர்ந்த கடை உரிமையாளர் அவற்றை உருக்கி தங்கத் தட்டுகளாக மாற்றிய நிலையில் கைதுசெய்யப்பட்டார்.


இந்தநிலையில் சாவகச்சேரி நீதிமன்றில் சந்தேக நபர்கள் 6 பேரையும் முற்படுத்தியபோது அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-159)




கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேணும். அப்பிடி வந்தால்தான் ரண்டுபேரும் போட்டி போட்டு விலையைக் குறைச்சு, தரமான கீரையை விப்பினம். இது எங்கட யாழ்ப்பாணத்து ஓட்டோக்காரருக்கும் பொருந்தும். இவ்வளவு நாளும் தாங்கள் நினைச்சபடி தனித்தவில் வாசிச்சு வந்தவைக்கு, இப்ப சில பிரைவேட் கொம்பனியள் கொண்டு வந்த 'அப்ஸ்' அடிவயித்தைக் கலக்க வைச்சிருக்கு. உந்த 'அப்ஸ்' வரும்வரை ஓட்டோக்காரர் வைச்சதுதான் சட்டம், சொன்னதுதான் ரேட் எண்ட நிலைமை. அவையின்ர 'மூட்' மாறினால் ரேட்டும் மாறும். எப்ப ரேட் மாறும், ஏறும் எண்டெல்லாம் அந்தந்த ஓட்டோக்காரருக்கு மட்டும்தான் தெரியும். பெற்றோல் நாலாயிரம் ரூபாவுக்கு கூட கள்ளச் சந்தையில கிடைக்காத நேரத்தில ஏத்தின ரேட்டை இன்னும் கன ஓட்டோக்காரர் கைவிடேலை. ஏதோ மனமிரங்கி சிலர் கொஞ்சம் குறைச்சிருக்கினம். மீற்றரைப் பூட்டி, நியாயமான ரேட்டில ஓடுங்கோ எண்டு அரசாங்க அதிபர் சொல்லியும் இவை அதை பெரிசா மைண்ட் பண்ணேலை. 'இவையென்ன சொல்லுறது, நாங்கள் என்ன கேக்கிறது?' எண்ட மிதப்பிலதான் இருந்தவை. பிறகு மீற்றர் பூட்டாட்டி ஓட்டோ ஓடேலாது எண்டு சட்டத்தை இறுக்கினபிறகுதான் ஓட்டோக்காரர் கொஞ்சம் இறங்கி வந்து மெல்ல மெல்ல மீற்றர் பூட்டத் தொடங்கினவை. ஆனால் அதுக்குப் பிறகும் மீற்றர் பூட்டினாலும், 'ஹயர்' ஓடேக்குள்ள மீற்றரை நிப்பாட்டிப் போட்டு தாங்கள் நினைச்ச காசை வாங்கினவை கனபேர். ஆனால் எல்லாத்துக்கும் சேர்த்து அவைக்கு உந்த பிரைவேட் 'அப்ஸ்' ஆப்பு வைச்சிட்டுது.

அந்த 'அப்ஸை' எங்கட போனில டவுண்லோட் பண்ணிப்போட்டு, எங்க போகோணும் எண்டு சொன்னால் அந்த இடத்துக்குப் போகக்கூடிய வாகனம் எத்தினை கிட்ட நிக்குது, எவ்வளவு ரேட் எண்டெல்லாம் போனில வரும். அதில எங்களுக்குப் பிடிச்ச ரேட்டில, பிடிச்ச வாகனத்தை 'புக்' பண்ணிப்போட்டு போய்வரலாம். அதால சனங்கள் எல்லாம் ஓட்டோவை விட்டிட்டு இப்பிடி ஒன்லைன்ல புக் பண்ணிட்டு, கொஞ்சக் காசோட போய்வரத் தொடங்கின பிறகுதான் எங்கட ஓட்டோக்காரருக்கு நிலைமையின்ர விபரீதம் விளங்கியிருக்கு. இப்பிடியே போனால் எல்லாச் சனமும் ஓட்டோவை முழுசாக் கைவிட்டிடும் எண்டு பயம் வந்திட்டுது. அதுக்குப் பிறகுதான் அங்கையிஞ்ச எண்டு ஓடித்திரிஞ்சு , அந்த 'அப்ஸை' நிப்பாட்ட அலுவல் பாத்திருக்கினம். ஆனால் அப்பிடி அலுவல் பார்த்தும் ஒண்டும் செய்யமுடியேலை. கடைசியா தங்கட 2500 குடும்பங்களின்ர வயித்திலை அடிக்கிற அந்த 'அப்ஸை' நிப்பாட்டச் சொல்லி நேற்று ஆர்ப்பாட்டமும் வைச்சிருக்கினம். ஆனால் 2500 குடும்பங்களுக்கு பாதிப்பு எண்டு சொல்லிப்போட்டு, ஆர்ப்பாட்டத்துக்கு கிட்டத்தட்ட 250 ஓட்டோக்காரர் தான் தங்கட ஓட்டோவோட வந்தவை, அப்ப மிச்சம் 2250 குடும்பங்களுக்கும் இதால பாதிப்பில்லை எண்டுதானே அர்த்தம்?

இப்பகூட 'நாங்கள் இனிமேல் ரேட்டைக் குறைக்கிறம். மீற்றர்ப்படி நியாயமா ஓடுவம்' எண்டு சொல்ல இந்த ஓட்டோக்காரருக்கு மனம் வரேலை. 'அப்ஸை' நிப்பாட்டச் சொல்லித்தான் நிக்கினமே தவிர, தாங்கள் அதைவிட மலிவான ரேட்டில இல்லாட்டி அதே ரேட்டுக்கு ஓடுவம் எண்டு சொல்லுகினமில்லை. 'அப்ஸில' பதிஞ்சா ஓட்டோ, கார் எல்லாம் மலிவா ஓட ஏலுமெண்டால் இந்த ஓட்டோக்காரராலயும் அப்பிடி ஓட ஏலும் தானே? அப்பிடி மலிவா இவை ஓடினால் சனம் ஏன் 'அப்ஸை' டவுண்லோட் பண்ணி மினக்கெடப்போகுது? ஆர்ப்பாட்டம் செய்யிறதை விட்டிட்டு இப்பிடி ரேட்டைக் குறைச்சாலே எல்லாப் பிரச்சினையும் தீர்ந்திடுமே.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை கிடைக்காமையால் பாதிப்புறும் பெரும்போகம்

## விவசாயிகள் கவலை

**யாழ்ப்பாணம், ஒக். 12**

**மழை இன்னமும் கிடைக்கப்பெறாமையால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பெரும்போக நெற்செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் கூறுகையில், அநேகமான வயல்நிலங்கள் சீர்செய்யப்பட்டு நெல் விதைக்கப்பட்டுள்ளது. சில வயல்களில் நெல் முளைத்து பயிராக வந்துள்ளது.

இந்தநிலையில் இதுவரை மழை கிடைக்கப்பெறாமையால் முளைத்த பயிர்கள் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன. மழை வேண்டி ஆலயங்களில் சிறப்புப் பூசை வழிபாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்துவரும் நாள்களில் மாரி மழை ஆரம்பிக்காவிட்டால் பெரும்போக நெற்செய்கை பாதிப்புறும் நிலை உருவாகும் - என்றார். (ச-17)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக்.12

இருபாலை கிழக்கு அருள்மிகு கதிர்காம ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. (ய-40)



ஏழாலையில் சர்வதேச சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு இரண்டாம் கட்ட இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கல் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏழாலை தெற்கில் அமைந்துள்ள தனியார் வர்த்தக மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)

## கல்விசார் பிரச்சினைகளைத் தீர்க்க

# சர்வதேச கல்வியியல் மாநாடு யாழ்.பல்கலையில் விரைவில்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள்பீடம் கலைப்பீடத்திலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறையுடன் இணைந்து சர்வதேச கல்வியல் ஆய்வு மாநாடொன்றை விரைவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

'எமது பிரதேசத்தின் கல்விசார் சவால்கள்' எனும் தொனிப்பொருளில் இந்த ஆய்வு மாநாட்டை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. ஆ. நித்திலவர்ணன் தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற கல்விசார் ஆய்வு மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி, வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி, வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவை இந்த சர்வதேச கல்வியியல் மாநாட்டுக்கு அனுசரணை வழங்கவுள்ளன.

எமது பிரதேசங்களில் தீர்க்கப்படவேண்டிய பல்வேறு கல்விப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதனைக் கூட்டாகவே தீர்க்கவேண்டும். கல்வித் துறை சார்ந்தவர்கள் அனைவரும் இணைவதன்மூலம் தான் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-66)

# 'யாழ்முத்து', இளங்கலைஞர் விருதுகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குட்பட்ட கலைஞர்களைக் கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் 'யாழ்முத்து' மற்றும் 'இளங்கலைஞர்' விருதுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பேரவையால் எதிர்வரும் நவம்பரில் பண்பாட்டுப் பெருவிழா நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் மூத்த கலைஞர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விருதுகளுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் அறிவுறுத்தல்களை மாவட்டச் செயலக இணையத்தளமான http://jaffna.dist.gov.lk இலும் பிரதேச செயலக கலாசாரப் பிரிவிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் உரிய ஆவணங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னதாக அந்தந்தப் பிரதேசசெயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலரும் மாவட்ட பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான அ.சிவபாலசுந்தன் தெரிவித்துள்ளார். (ச-100-66)

## யாழ்.மாவட்டத்தில்

# கூட்டுறவு அலுவலர்கள் மூவருக்குப் பதவியுயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றிய 3 சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களாக பதவியுயர்வு பெற்றுள்ளனர். க.கமலநாதன். வே.பிரதீஸ்குமரன். சி.குணாளன் ஆகிய மூவருமே பதவியுயர்வு பெற்றனர்.

மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுக்கமைய அவர்கள் பதவியுயர்த்தப்பட்டனர். (ச-17)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகி முடியும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தவும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** மனதில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம். இளைய சகோதரர்கள்மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகமாகவும் செயல்களில் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள்.நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். பொறுமை அவசியம்.

**கடகம்:** உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். அவ்வப்போது மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்புக் கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் நாள். தேவையான பணம் இருப்பதால் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். மனஇறுக்கம் நீங்கி நிம்மதி உண்டாகும். வியாபாரத்தில் உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** தேவையான பணவரவு கிடைக்கும் என்றாலும் பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். அவ்வப்போது மனதில் சோர்வு உண்டாகும். உறவினர்களின் வருகையால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமை அவசியம்.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்து நீண்டகாலமாகத் திரும்பவராத கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். ஆனால், தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# வல்லை வெளியில் பனம் விதை நடுகை



யாழ்ப்பாணம், ஒக். 12

அச்சுவேலி வல்லைச் சந்திக்கு அண்மையாகவுள்ள வல்லை வெளிப் பகுதியில் வெள்ளநீர்த் தடுப்பணையின் சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமுள்ள இரண்டு பக்கங்களிலும் 2000 பனம் விதைகள் நடுகை செய்யும் செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

செலிங்கோ லைப் நிறுவனத்தின் அச்சுவேலிக் கிளையினரின் ஏற்பாட்டில் இந்தச் செயற்றிட்டம் "கற்பக தருவை நாட்டுவோம். கவினுறு சூழலை ஆக்குவோம்" எனும் தொனிப்பொருளில் எதிர்காலத் தலைமுறையினர் பயன்களைப்பெற்றுக்கொள்ளும்வகையில் முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் செலிங்கோ லைபின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர்களான பிரதீப், நிதிவண்ணன், பனை அபிவிருத்திச்சபையின் ஓய்வுநிலை அலுவலரான பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளச்சுரண்டலைத் தடுக்க அனைவரும் இணைவோம்

## மன்னார் ஆயர் இம்மானுவேல் அழைப்பு



மன்னார், ஒக். 12

**அபிவிருத்தி எனும் பெயரில் மன்னார் மாவட்டத்தில் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும் அழிக்கப்படுவதையும் நாம் அனுமதியோம். இவற்றை வளத்தோடும் செழிப்போடும் எமது நாளைய தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது.**

- இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை மன்னார் வாழ்வுதயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

மன்னார் மாவட்டத்தில் நாளுக்கு நாள் கனியவள அகழ்வு, காற்றாலைத் திட்டம், சட்டவிரோத மண் அகழ்வு இந்திய இழுவைப் படகுகளில் அத்துமீறிய நுழைவு, காடழிப்பு, கடலோர கண்டல் தாவரங்கள் அழிப்பு ,வனவிலங்குகள் சரணாலயத்துக்குச் சொந்தமான காணிகள் தனி நபர்களால் அபகரிக்கப்படுதல் என இயற்கைவள சுரண்டல்கள் அதிகரித்து வருகின்றன.

அபிவிருத்தி எனும் பெயரில் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்கமுடியாது.

எனவே பொறுப்புடைய அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து இயற்கையைப் பாதுகாப்பதற்கு வழிவகுக்கவேண்டும். சர்வதேச நிறுவனங்களும், இயற்கை வள பாதுகாப்புச் செயற்பாட்டாளர்களும், இயற்கைவள சட்டவாளர்களும் இணைந்து செயலாற்ற வேண்டும். இந்த நடவடிக்கைகளுக்கு நாமும் ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (ச-213)

## விளையாட்டு உபகரணங்களை கையளித்த சூழகம் அமைப்பு



யாழ்ப்பாணம், ஒக். 12

சூழலியல் மேம்பாட்டு அமைப்பான 'சூழகம்' அமைப்பால் விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சரவணை ஈகிள் ஸ்ரார் விளையாட்டுக் கழகம், ஊர்காவற்றுறை காவலூர் சிறுத்தைகள் விளையாட்டுக் கழகம் என்பவற்றுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

'சூழகம்' அமைப்பின் செயலாளர் க. நாவலன் தனது தந்தையின் பிறந்ததின நினைவை முன்னிட்டு இவற்றை வழங்கினார். (ச)



## விவாதப் போட்டியில் யாழ். இந்து வெற்றி!

யாழ்ப்பாணம், ஒக். 12

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 'வேத்தியர் சவால்' கேடய விவாதப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் அணி வெற்றியீட்டியுள்ளது.

கொழும்பு றோயல் கல்லூரியால் நடத்தப்பட்ட இந்தப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதில் 24 விவாத அணிகள் பங்கேற்றிருந்தன.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் அணி வெற்றியீட்டி, வெற்றிக் கேடயத்தைத் தனதாக்கியது. (ச-66)





## தேசியமட்ட உதைபந்தில் மகாஜன இரண்டாமிடம்!

யாழ்ப்பாணம், ஒக்.12

தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கு இடையே கல்வி அமைச்சால் நடத்தப்படும் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 20 வயதுக்குக்கீழ்ப் பிரிவில் பொலநறுவை பெண்டிவெவா மத்திய கல்லூரி பெண்கள் அணி முதலிடத்தைப் பெற்றுள்ளது. இரண்டாம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டி கடந்த திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. மகாஜனக் கல்லூரியை எதிர்கொண்ட பொலநறுவை பெண்டிவெவா மத்தியகல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முதல் பாதி ஆட்டத்தின்போது இரண்டு அணிகளும் கோல்களைப் பெறவில்லை. இரண்டாம் பாதி ஆட்டத்தின்போது பொலநறுவை பெண்டிவெவா அணியினர் இரண்டு கோல்களைப் பெற்றனர். (எ-27)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

பரிபாலனசபைத் தலைவர் த.சோதிலிங்கத்தின் தலைமையுரையைத்தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் ச.நவநீதன் 'நவராத்திரி உணர்த்தும் வாழ்வியல்' எனும் விடயப்பொருளில் நிகழ்த்தவுள்ளார். (ச)

✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஒக். 12

பெரியபுராணம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடத்தப்படும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து சைவப்புலவர் செ. த. குமரன் 'ஸ்ரீருத்திரம் ஓதியதால் உருத்திரபசுபதி எனும் திருப்பெயர் பெற்ற நாயனார்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)

✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஒக். 12

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால. குணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜையின் ஓர் அங்கமாக நவராத்திரி விழாவும் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இடம்பெறவுள்ளன.

தினமும் மாலை 4 மணிக்குச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் தலைமையில் இவை இடம்பெறவுள்ளன.

மாணவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர்கள் சி.கா. கமலநாதன், பொன். சந்திரவேல், செ.த.குமரன், ச.முகுந்தன், அவர்களும் இளஞ்சைவப்புலவர்கள் க. கைலநாதன், ச. நவநீதன் , நித்திய பாபுதரன், த. மனோஜ்குமார், க.கயிலைவாசன், ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணியில் சிறுவர்தினம்



யாழ்ப்பாணம், ஒக். 12
சர்வதேச சிறுவர்தின நிகழ்வுகள் வரணி மத்திய கலாசார மண்டபத்தில் மாணவன் அ.அபிஷன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.உதயகுமார், வழிகாட்டல் ஆலோசனை வளவாளர் ஜெ.பிரியந்தன், ஓய்வுபெற்ற பல்கலைக்கழகப் பதிவாளர் கமலேஸ்வரன்,ஓய்வுபெற்ற அதிபர் க. கந்தசாமி, மந்துவில் ஸ்ரீ பாரதி அதிபர் க.சத்தியானந்தன்,பெற்றோர், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-159)

# இந்தியத் தொழிநுட்பத் திட்டம் வடக்குக்கு வரப்பிரசாதம்

## ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

**இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டமானது பல்வேறுபட்ட துறைகளைச் சேர்ந்தோருக்கு ஒரு பொன்னான வாய்ப்பாகும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**


இந்தியத் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நாள் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டமானது 400க்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு பல்வேறுபட்ட துறைகளான தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலமொழி, முகாமைத்துவம், கிராமிய அபிவிருத்தி, நிதி, தொடர்பாடல் போன்றவற்றில் ஆற்றல் விருத்தியையும் பயிற்சிகளையும் வழங்கும் ஒரு பொன்னான வாய்ப்பாகும்.

இனிவரும் காலங்களில் இந்தத் திட்டத்துக்கான பயனாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும் என்று இந்தியத்துணைத்தூதரகம் தெரிவித்துள்ளது - என்றார். (ச-26)



## பொன்னாலை — பரு. வீதியிலுள்ள

# புனரமைப்புச் செய்த பாலத்தை பாவனைக்கு விடுவியுங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 12
பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான நகுலேஸ்வர ஆலயத்தின் வடபுறத்திலுள்ள பொன்னாலை - பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள புனரமைக்கப்பட்ட பாலத்தைப் பாவனைக்கு விடுவிக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பொருளாதார நெருக்கடி காரணமாக பாலத்தின் புனரமைப்பு கைவிடப்பட்டு பின்பு மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு பணிகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பாலத்தை பொதுமக்கள் பயன்படுத்த இன்னமும் விடுவிக்காத நிலையில் அருகில் அமைக்கப்பட்ட தற்காலிக குறுகிய பகுதியூடாகவே சிரமத்தின் மத்தியில் பயணம் மேற்கொள்ளவேண்டியுள்ளது. விரைவில் இந்தப் பாலத்தை மக்கள் பாவனைக்கு விடுவித்து சுமுகமான பயணத்தை ஏற்படுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.

இதுதொடர்பில் வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குறாசினை தொடர்புகொண்டு கேட்டபோது, குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து விரைவில் மக்கள் பாவனைக்கு பாலம் கையளிக்கப்படும்- என்றார். (ச-125)




# நம்நாட்டுக் குழுப் பாடலில் உசன் ம.வி. முதலிடம்!

யாழ்ப்பாணம், ஒக். 12
அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவிகள் நம்நாட்டுப் பாடல் குழு இசையில் மாகாண மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டிகள் கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன.

இதில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலிருந்து பங்கேற்ற தரம் - 6 தொடக்கம் 13 வரையான மாணவிகளான தி.ஆர்த்திகா, ந.பபிநயா, இ.சிவாஜினி, ச.ஜனனி, வி.தீபிகா, த.தர்ணிகா, செ.தர்மிகா, நி.கேசனா, கு.அட்சிகா,ச.கோபிகா ஆகியோர் நம் நாட்டுப் பாடல் குழு இசையில் முதலாம் இடத்தை தமதாக்கினர். (ச-159)

# மன்னார், முல்லைத்தீவில் சந்நிதி ஆச்சிரமம் உதவி



யாழ்ப்பாணம், ஒக். 12
சந்நிதியான் ஆச்சிரமத்தால் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னாரில் பொருளாதாரம் நலிவுற்ற 62 மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களை மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்து 2 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உலருணவுப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. மன்னார், கள்ளியடிக் கிராமத்தில் வசிக்கும் பெண்தலைமைத்துவக் குடும்பமொன்றுக்கு மலசலகூடக் கட்டுமானத்துக்கும் வீட்டுக் கதவுகள் பொருத்துவதற்கும் ஒரு தொகை நிதி வழங்கப்பட்டது. அதேவேளை முல்லைத்தீவு, நெடுங்கேணி, மாமடுச்சந்தி கற்பகா அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற 27 மாணவர்களின் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலமுள்ளவர் பக்கமே நீதி!

காசாவை முழுமையாகக் கைப்பற்றுமாறு இஸ்ரேல் தன் படைகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றது. மின்சாரம், குடிதண்ணீர், எரிவாயு, உணவு இவை அனைத்தும் முடக்கப்பட்டு கடந்த நான்கு நாள்களாக காசாவை மூர்க்கமாகத் தாக்கிவருகின்றது இஸ்ரேல். புலிகளுக்கு எதிரான போரில் எப்படி அப்பாவிப்பொதுமக்களையே அதிகம் இலங்கைப் படைகள் கொன்றொழித்தனவோ அதே போன்று ஹமாஸூக்கு எதிரான இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையில் கொல்லப்படுவதும் அப்பாவிப் பொது மக்கள்தான். அவர்கள் செய்த 'குற்றமெல்லாம்' இனத்தால் பலஸ்தீனர்கள் என்பதன்றி வேறில்லை.

ஹமாஸூக்கான இஸ்ரேலின் பதிலடி நடவடிக்கைகள், மூர்க்கத்தனம் என்பதில் இருந்து போர்க்குற்றம் என்பதாகவும், மிருகத்தனமும் மிலேச்சத்தனமும் மிக்கதாகவும் இப்போது மாறியிருக்கின்றது. உலகின் மிக நெரிசலான இடங்களில் ஒன்றாக அடையாளப்படுத்தப்படுகின்றது காசா. வெறும் 350 சதுர கிலோமீற்றருக்குள் 25 இலட்சம் பலஸ்தீனர்கள் நெரிசலாக வாழ்கின்றனர். இங்குதான் 'ஹமாஸ் வேட்டையை' பிணம்தின்னிக் கழுகான அமெரிக்காவின் அனுசரணையுடன் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது இஸ்ரேல். காயமடைந்தவர்களை 'அள்ளிச்சென்ற' இரண்டு அம்புலன்ஸ் வாகனங்கள் இஸ்ரேலால் தாக்கப்பட்டிருக்கின்றன. மட்டுமல்லாமல், இலங்கையில் இறுதிப்போரின்போது பயன்படுத்தப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளை இப்போது இஸ்ரேலும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்தப் போர்க்குற்றத்தை சர்வதேச ஊடகங்கள் வலுவாகவே எண்பித்திருக்கின்றன.

ஆனால், உலக நாடுகள் பலஸ்தீனத்தின் துயரத்தை இம்மியளவும் கண்டதாக இல்லை. போரில் வென்றவன் தான் எப்போதும் வரலாற்றை எழுதுகின்றான். இதனால் தான் குருதிக் காட்டேறிகள் பரிசுத்தவான்களாக பல இடங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றனர். இஸ்ரேல் விவகாரத்தில் நடந்ததும் நடந்துகொண்டிருப்பதும் அதுவே. இஸ்ரேல் –ஹமாஸ் மோதலால், பலஸ்தீனத்துக்கான நன்கொடை நிதிகள் நிறுத்தப்படுவதாக பல உலக நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் அறிவித்திருக்கின்றன. இஸ்ரேலும் –ஹமாஸூம் மோதுகின்றன என்பதற்காக, பலஸ்தீனர்களுக்கான உதவிகள் எதற்காக நிறுத்தப்பட வேண்டும்? 70 ஆயிரம் ஹமாஸ் போராளிகளுக்காக சுமார் 24 இலட்சம் பலஸ்தீனர்களுக்கான நன்கொடைகள், ஒதுக்கீடுகள், மருத்துவ உதவிகள், சுகாதாரத்தேவைகள் உலக நாடுகளால் புறக்கணிக்கப்படுவதானது எவ்வகையான செயல்?


உக்ரைன் மீது ரஷ்யா மேம்பட்ட ஏவுகணைகளால் தாக்கியமைக்காக அமெரிக்காவும், ஐக்கிய நாடுகள் சபையும், ஐரோப்பிய ஒன்றியமும் ரஷ்யாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளைக் குவித்தன. ரஷ்யத் தாக்குதல்களைப் பொறுத்து அந்தத் தடைகள் இறுக்கப்பட்டன. எனில், இஸ்ரேலின் பொஸ்பரஸ் தாக்குதல்களுக்கு எதிராக எந்தப் பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்படவில்லையே! அது ஏன்? நவீனகால அரசியல் என்பது பணத்தால் நெய்யப்பட்டு, தத்தமக்கேற்ற நியாயங்களால் அலங்கரிக்கப்பட்டது. ஈழப்போர் முதல் காசா வரையிலான சர்வதேசத்தின் 'நியாயத்தராசு' இப்படி ஓரவஞ்சனையான பலமுள்ளவர்கள் பக்கம் தாழ்வதே வழக்கம்.

இஸ்ரேல் என்பது ஒரு குருதிப்பூமி. வரலாற்றில் அவர்கள் சிந்தாத குருதியில்லை. வரலாற்றின் ஒவ்வொரு பக்கங்களிலும் யூதர்கள் வெவ்வேறு அதிகாரத் தரப்புகளால் நிலமற்றவர்களாக்கப்பட்டு, இலட்சக் கணக்கில் கொல்லப்பட்டுள்ளார்கள். எனவே நிலமிழந்தவர்களின் வலியையும், பலம்பொருந்தியோரின் இரத்தவெறியையும் மற்றெந்த இனங்களைவிடவும் யூதர்களே அதிகம் உணர்ந்திருப்பர். எனவே அவர்கள் உண்மையில் பலஸ்தீனத்தோடு சுமுகமான வழிமுறையில் தமக்கான நாட்டைப் பெற்றுக்கொள்வதோடு, பலஸ்தீனர்களுக்கும் அதே நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம். ஆனால் மகாவம்சம் புனைவுகளால் உருவாக்கிய வரலாற்றை சிங்களவர்கள் எப்படி உண்மையென நம்புகிறார்களோ, அதே போன்று ஐதீகத்தின் வழியாக இஸ்ரேல் இருக்குமிடமே தமக்கு வாக்களிக்கப்பட்ட தேசம் என்பதை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு பலஸ்தீனத்தை ஆக்கிரமித்தது எவ்வகையில் நியாயம்? இப்போது அதே பலஸ்தீனர்கள் தமது தேசத்துக்காகப் போராடும்போது, அதை இரும்புக்கரம் கொண்டு நசுக்குவது அதைவிட அநியாயம்.

## நாளொரு நல்வார்த்தை

காயங்களோடு சிரிப்பது எளிதல்ல
அப்படிச் சிரிக்கத் தொடங்கிவிட்டால்
எந்தக் காயமும் பெரிதல்ல...!

–புத்தர்–




# பலஸ்தீனத்தின் பக்கம் எப்போதும் இருப்போம்

## மஹிந்த வின் நிலைப்பாடு இது



கொழும்பு, ஒக். 12

**நாம்** பலஸ்தீனம் பக்கம்தான் அன்று நின்றோம். இன்றும்நிற்கின்றோம். எதிர்காலத்திலும் நிற்போம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ச, கண்டி தலதாமாளிகைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.

இதன்போது இஸ்ரேல் ஹமாஸ் அமைப்புக்கிடையில் நடைபெற்றுவரும் போர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே மஹிந்த மேற்கண்டவாறு பதிலளித்தார். (ஒ-44)

## மருத்துவத்துறை

# வெளிநாட்டுப் பட்டத்தை அங்கீகரிக்கப் பரிசீலனை

கொழும்பு, ஒக். 12

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் மருத்துவப் பட்டப்படிப்புகளை அங்கீகரிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தக் குழு வெளிநாட்டுப் பட்டப்படிப்புகளை அங்கீகரித்தால், சர்வதேச தரம்வாய்ந்த ஆயிரம் மருத்துவக் கல்லூரிகளின் பட்டப்படிப்புகளை இலங்கைக்குள் அனுமதிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வாய்ப்புகள் இருக்கவே செய்கின்றன. மருத்துவர்கள் அண்மைக்காலமாக நாட்டைவிட்டு வெளியேறுவதால், இலங்கையில் மருத்துவர்கள் ஆளணியில் கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டுவரு கின்றது. இதிலொன்றே இந்த விடயம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

**நாளை** 13.10.2023 வெள்ளிக்கிழமை புரட்டாதி 26

சுபநேரம் : 06.02 – 07.32
ராகுகாலம் : 10.32 – 12.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆடுகளத்துக்கு அப்பால்...

உலகக்கிண்ணத் தொடரில் இதுவரை இந்திய அணி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்ற போதிலும், அந்த அணியை ஆரம்பம் முதல் சர்ச்சைகளும் பிரச்சினைகளும் சோதனைகளும் விரட்டிக்கொண்டே இருக்கின்றது என்றால் அதில் மறுபேச்சில்லை.

இந்திய அணியின் இளம் வீரர் கில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே. 80 வீதம் அவர் உடற்தகுதி பெற்றுவிட்ட நிலையில் அவர் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து இந்திய கிரிக்கெட் சபையால் பிரத்தியேக அறையில் தங்கவைக்கப்படவுள்ளார் கில். எனினும், கில் முழுமையாக நலம்பெற்று முறையான பயிற்சிகளின் பின்னர் உலகக்கிண்ணத் தொடரில் ஆடும் அளவுக்குத் தகுதிபெறுவதற்கு இன்னும் இரு வாரங்கள் தேவை என்பதாக அணியின் மருத்துவக் குழு அறிவித்துள்ளதாம்.

கில் களமிறங்க வாய்ப்புக்கள் அமையாத பட்சத்தில் மாற்றுவீரராக ஜெய்ஷ்வால் மற்றும் ஹெய்க்வாட் இருவரையும் தயாராக இருக்குமாறும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவுறுத்தியுள்ளது. ஊடகங்களுக்கு வெளியிடப்படாமல் இருந்த இந்தத் தகவல்களை இந்திய ஊடகங்கள் ஒருவாறு மோப்பம் பிடித்துவிட்டன. இதையடுத்து கில் தொடர்பில் மிகவிரைவில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதான செயலாளர் ஜெய் ஷா தெளிவுபடுத்துவார் என்றும் தெரியவருகின்றது.



கில் தான்
கில்லி
எண்டிச்சினம்
இப்ப
விளையாடுறதுகூட
சந்தேகமா
கிடக்கு
கண்டியளோ...

### ரோகித் அபாரம், பும்ரா மிரட்டல்

# ஆப்கானை நேற்று புரட்டியது இந்தியா



**புதுடில்லி, ஒக். 12**

**உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், பும்ராவின் கட்டுக்கோப்பான பந்துவீச்சும், ரோகித் சர்மாவின் அதிரடியும் கைகொடுக்க இந்திய அணி இலகுவான வெற்றியைப் பெற்றது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று, முதலில் துடுப்பெடுத்தாடியது ஆப்கானிஸ்தான் அணி. ஆப்கானிஸ்தான் அணியின் முன்னணி வீரர்களான குர்பராஸ், இப்ராஹிம் சடான், ரஹ்மட் ஷா மூவரும் பெரிதாகப் பிரகாசிக்கவில்லை. மூவரும் முறையே 21, 22, 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அணித்தலைவர் ஷாகிடி மற்றும் ஓமர் ஷாய் இருவரும் மத்திய வரிசையில் வலிதான இணைப்பாட்டத்தை வழங்கி அணியைப் பலப்படுத்தினார்கள். பும்ராவின் பந்துவீச்சை நிதானமாகவும், ஏனையோரின் பந்துவீச்சை அடித்தும் அவர்கள் ஆடிக்கொண்டிருந்தனர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். இணைப்பாட்டம் 100 ஓட்டங்களைத் தாண்டியிருந்தது. 62 ஓட்டங்களுடன் ஓமர் ஷாயை வீழ்த்தினார் பாண்டியா. 80 ஓட்டங்களுடன் தலைமைத்துவ இன்னிங்ஸை முடிவுக்குக் கொண்டுவந்தார் குல்தீப் யாதவ். முடிவில் 8 விக்கெட்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது ஆப்கானிஸ்தான்.

பந்துவீச்சில் பும்ரா 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு, ஆட்டத்தின் முதலாவது பந்துப் பரிமாற்றத்திலிருந்தே அடித்தாடி பலம் சேர்த்தார் அணித்தலைவர் ரோகித். இஷான் கிஷான் ரோகித்துக்கு வாய்ப்பை வழங்கும் விதமாக 'ஸ்ட்ரைக் ரொட்டேட்' செய்து கொண்டிருந்தார். 6 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களைக் கடந்தது இந்தியா. ரோகித் 30 பந்துகளில் அரைச்சதத்தையும் 63 பந்துகளில் சதத்தையும் பதிவு செய்தார். அணி 156 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 47 ஓட்டங்களுடன் இஷான் ஆட்டமிழந்தார். ரோகித் 131 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும், இந்தியாவின் வெற்றி 'எப்பவோ கண்டடைந்த காரியம்' என்பதுபோல் இருந்தது. கோலி, ஸ்ரேயாஸ் இருவரின் இணைப்பாட்டத்தையும் இறுதிவரை ஆப்கானால் பிரிக்க முடியவில்லை. முடிவில் 90 பந்துகள் மீதமிருக்க 8 இலக்குகளால் வென்றது இந்திய அணி. கோலி 55 ஓட்டங்களுடனும், ஸ்ரேயஸ் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)

## சதம் காசாவுக்காக



இலங்கைக்கு எதிராக நேற்றுமுன்தினம் தான் பதிவுசெய்த சதத்தை, காசா மக்களுக்கு அர்ப்பணிப்பதாக பாகிஸ்தான் அணியின் வீரர் மொகமட் ரிஸ்வான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது காசாவில் உள்ள எங்கள் சகோதர, சகோதரிகளுக்காக. பாகிஸ்தானின் வெற்றியில் பங்களித்ததில் மகிழ்ச்சி. வெற்றியை எளிதாக்கியதற்காக ஒட்டுமொத்த அணிக்கும், குறிப்பாக அப்துல்லா ஷபீக் மற்றும் ஹசன் அலிக்கு எனது பாராட்டுக்கள். அற்புதமான விருந்தோம்பல் மற்றும் ஆதரவு அளித்ததுக்காக ஹைதராபாத் மக்களுக்கு மிகவும் நன்றி' - என்றார். (ம)

## பகைமைக்கு முற்றுப்புள்ளி



இந்திய அணி வீரர் விராட் கோலிக்கும், ஆப்கானிஸ்தான் அணியின் வீரர் நவீனுக்கும் இடையில் சில மாதங்களாக நீடித்துவந்த பகைமை நேற்று 'ஓர் ஆரத்தழுவலுடன்' முடிவுக்கு வந்தது.

ஐ.பி.எல். தொடரில் கோலி பெங்களூருக்காகவும், நவீன் லக்னோவுக்காகவும் ஆடுகின்றனர். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டத்தின்போது கோலி, நவீன் இருவரும் வாக்குவாதப்பட்டனர். இது தீவிரமான வார்த்தைப்போராகப் பார்க்கப்பட்டது. களத்துக்கு வெளியில் விராட் கோலியை கடுமையாகச் சீண்டிவந்தார் நவீன். நேற்றைய ஆட்டத்தின்போது கோலி நவீனை அற்புதமாக எதிர்த்தாடினார். இதன்போது நவீனை 'காலாய்க்கும் விதமாக' ரசிகர்கள் கூச்சலிட்டனர். கோலியோ அவ்வாறு செய்யவேண்டாம் என்று ரசிகர்களைப் பார்த்து சைகையால் கூறினார். இதையடுத்து கோலியை நோக்கி விரைந்துவந்த நவீன் அவரைக் கட்டியணைத்து தன் அன்பையும் சமாதானத்தையும் வெளிப்படுத்தினார். இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தினம் ஒரு பரிசு நாள் 6 இன் வெற்றியாளர்கள்

சி.டிவின்சியா - வவுனியா
ரி.வினோசியா - யாழ்ப்பாணம்
ந.அபிராமி - பண்டத்தரிப்பு
பி.றணுஜன் - தாவடி
என்.நஜாத் - மன்னார்
து.கோகிஷன் - வல்வெட்டித்துறை
எல்.நிருஷிகா - கோப்பாய்
வா.ஜெயரட்ணம் - ஆனைக்கோட்டை
ஜெ.பிறிட்மென் - நல்லூர்
ய.அபிஷாந் - கரவெட்டி
வை.துளசிகா - சித்தங்கேணி
எம்.ஜெயச்சந்திரா - அல்லாரை
கே.குரேசியன் - புளியம்பொக்களை
வி.தர்சிகன் - மாவிட்டபுரம்
சி.ஜெனிஸ்ரன் சாவகச்சேரி

# இந்தியாவை பாகிஸ்தான் மிக இலகுவாக வீழ்த்தும்



உலகக்கிண்ணத் தொடரில் இம்முறை இந்திய அணியை பாகிஸ்தான் தோற்கடிக்கும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரான வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணத் தொடரில் இதுவரை இரு அணிகளும் மோதிய 7 ஆட்டங்களிலும் இந்திய அணியே வெற்றிபெற்றுள்ளது. இந்த நிலையிலேயே இம்முறை பாகிஸ்தான் அணி வரலாற்றை மாற்றும் என்று அக்ரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரு அணிகளும் 7 முறை உலகக் கிண்ணத்தில் எதிர்த்து ஆடியுள்ளன. ஆனால் இந்தியா 7:0 என்று முன்னிலையில் உள்ளது. அடிக்கடி இதை எமக்கு நினைவூட்டியபடி இருக்கின்றது. இம்முறை தொடர் தோல்வி என்னும் சங்கிலி உடைக்கப்படும். பாகிஸ்தான் அணி அதைச் செய்யும் திறமை கொண்டதே - என்றார். (ம)

## இன்றைய ஆட்டம்



## ஓர் அலசல்

உலகக்கிண்ணத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இலங்கைக்கு எதிரான அசுர வெற்றியுடன் தென்னாபிரிக்க அணியும், இந்தியாவுக்கு எதிரான தோல்வியுடன் அவுஸ்திரேலிய அணியும் இந்த ஆட்டத்தில் களமிறங்குகின்றன.

லக்னோ மைதானத்தில் ஆட்டம் இடம்பெறவுள்ளது. இந்த மைதானம் சுழலுக்குச் சாதகத்தன்மை கொண்டதாக ஐ.பி.எல். பருவகாலத்தில் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், உலகக்கிண்ணத் தொடரில் எவ்வாறான தன்மைமிக்கதாக அமைக்கப்பட்டிருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனெனில் பரவலாக ஆடுகளத்தின் தன்மையில் சிறு மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அணிகளைப் பொறுத்தவரை இரு அணிகளும் அசுர பலமான துடுப்பாட்ட வரிசையைக் கொண்டிருக்கின்றன. வோர்ணர், சிமித், மார்ஷ், லபுஷேன், மக்ஸ்வெல், கேரி என்றவாறாக இருக்கின்றது ஆஸியின் மிரட்டல்படை. அதேபோல் தென்னாபிரிக்காவிடம் குயின்டன், வான் டெர் டசன், மில்லர், மார்க்ரம், கிளாசன் என்ற பலமான வீரர்கள் இருக்கின்றனர். வேகப்பந்து வீச்சிலும் ஸ்ராக், ஹசில்வூட் அவுஸ்திரேலியாவுக்கும், ரபாடா, இங்கிடி தென்னாபிரிக்காவுக்கும் பலம் சேர்க்கின்ற னர். ஆனால், சுழற்பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி பலவீனமாக உணரப்படுகின்றது. அடம் சாம்பா மட்டுமே அவுஸ்திரேலியாவின் பலம்மிக்க சுழற்பந்து வீச்சாளர். அவரும் இப்போது திறனில் இல்லை. மக்ஸ்வெல், சிமித் பகுதிநேர சுழற்பந்துவீச்சாளர்களாகச் செயற்படலாம்.

ஆனால், தென்னாபிரிக்க அணி சம்சி, கேசவ் மகாராஜ் என இரண்டு உலகத்தரமான சுழற்பந்து வீச்சாளர்களைக் கொண்டிருக்கின்றது. ஆடுகளம் சுழலுக்கு ஒத்துழைத்தால் தென்னாபிரிக்கா பலம்பெறும். இதற்கு முன்னர் இரு அணிகளும் இருதரப்புத் தொடரில் விளையாடிவிட்டே உலகக்கிண்ணத் தொடருக்குள் நேராகக் கால்வைத்துள்ளன. அணிப்புரிதல் பரஸ்பரம் இருக்கவே செய்யும்.

## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 7**

**அவுஸ்திரேலியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இன்றைய (12.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ..........................................

| | |
|---|---|
| பெயர் | : .................................... |
| முகவரி | : .................................... |
| | .................................... |
| தே.அ.இல | : .................................... |
| தொ.இலக்கம் | : .................................... |

**மெகா பரிசு**

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ..........................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

| | |
|---|---|
| பெயர் | : .................................... |
| முகவரி | : .................................... |
| | .................................... |
| தே.அ.இல | : .................................... |
| தொ.இலக்கம் | : .................................... |

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

**அவுஸ்திரேலியா** vs **தென்னாபிரிக்கா**

இடம் : லக்னோ
நேரம் : பி.ப. 2.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றின் தீர்ப்பு முன்மாதிரியானது நடவடிக்கை எடுக்க பெரமுன தயார்

## சாகர தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 12**
**அமைச்சர் நஸீர் விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, விசேட சட்டத்தரணிகள் அடங்கிய குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம். இதனை முன்மாதிரியாகக் கொண்டு கட்சியால் தீர்மானங்கள் எடுக்கப்படும் - இவ்வாறு பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து சுற்றால் அமைச்சர் நஸீர் அஹமட் நீக்கப்பட்டது சட்ட ரீதியானது என உயர்நீதிமன்றம்தீர்ப்பளித்துள்ளது. கட்சியின் தீர்மானத்தை மீறி 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு வாக்களித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து அமைச்சர் நஸீர் அஹமட் நீக்கப்பட்டார்.

இந்த நீக்கலுக்கு எதிராக அமைச்சர் நஸீர் அஹமட் உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். குறித்த வழக்கிலேயே மேற்படி தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தீர்ப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட பெரமுனவின் செயலாளர் கூறியவை வருமாறு,

'நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பதவி இழக்கப்படும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இருந்த நிலைமையைவிட மாறுபட்டதானதொரு வழக்குத் தீர்ப்பாக இது அமைந்துள்ளது.

விசேட சட்டத்தரணிகள் குழுவின் கவனத்துக்கு இந்தத்தீர்ப்பைக் கொண்டுசென்றுள்ளோம், இதற்கமைய கட்சி என்ற அடிப்படையில் கட்சிக்கு எதிராகச்செயற்படும் நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்' - என்றார். (ம-44)

## தேர்தலைப் பிற்போடுவதற்கு ஒத்துழைக்காதாம் பெரமுன!

கொழும்பு, ஒக். 12
தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்த கையோடு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். தேர்தலைப் பிற்போடுவதற்கு முயற்சிகள் இடம்பெறும்பட்சத்தில் அதற்கு ஆதரவு வழங்க மாட்டோம்.

- இவ்வாறு பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பெரமுனவின் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் நபருக்கு அந்தப்பதவியை வகிப்பதற்கு கால எல்லை ஒன்று இருக்கின்றது. நாடாளுமன்றத்துக்கும் அப்படித்தான். பொதுஜன பெரமுனக் கட்சி என்பது ஜனநாயகத்துக்காகப் போராடும், குரல் கொடுக்கும் கட்சியாகும். மஹிந்த ராஜபக்ச காலத்தில் முன்கூட்டியே தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு இல்லை.

இந்தக் காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்பட்டு, மக்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். மக்களுக்கு உள்ள இந்த ஜனநாயக உரிமையைப் பறிப்பதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். அந்தவகையில் உரிய காலத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவது தொடர்பாக எங்கும் கருத்து வெளியிடப்படவில்லை, சமூகத்தில் இருந்தும் அவ்வாறானதொரு கோரிக்கை விடுக்கப்படவில்லைதேர்தலை ஒத்திவைக்க முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு ஆதரவு வழங்கப்போவதில்லை. தேர்தல் உரிமையைப் பெறுவதற்காக எல்லா வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-44)

## பந்தயத்தால் பறிபோன உயிர்

பந்தயம் கட்டி 'நீருக்கடியில்' நடத்தப்பட்ட போட்டியில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. பாதுக்க துன்னான பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

பாதுக்கப் பகுதியில் விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட குழுவினர் குளிப்பதற்காகச் சென்றுள்ளனர். அங்கு நீருக்குள் அதிக நேரம் மூச்சை அடக்கக்கூடிய நபரைத் தெரிவு செய்வதற்கான போட்டி இடம்பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்துகொண்ட ஒருவர் நீருக்கடியில் சென்று அதிக நேரம் இருந்துள்ளார். இறுதியில் மயக்கமடைந்த நிலையில் அவர் மீட்கப்பட்டு பாதுக்க மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று அறிக்கையிட்டுள்ளனர். (எ-இ)

## உரிய நேரத்திலேயே ஜனாதிபதி வேட்பாளர்

### மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12
உரிய நேரத்திலேயே பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பெயரிடப்படுவார் என்று பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தில் நிச்சயம் மாற்றம் வரும். எந்தநாளும் எம்மால் அந்தப்பதவியில் இருக்கமுடியாது. புதியவர்கள் மற்றும் இளைஞர்கள் தலைமையேற்க முன்வரவேண்டும். ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. உரியநேரத்தில் அறிவிப்பு விடுக்கப்படும். சர்வதேச நாணய நிதியம்கூறுவதுபோல்தான் செயற்பட வேண்டும் என்றில்லை, மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் - என்றார். (எ-44)

## வாகனச் சாரதிகளுக்கு பொலிஸ் அறிவுறுத்தல்




கொழும்பு, ஒக். 12
வீதிகளில் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் வாகனத்தைச் செலுத்த வேண்டும் என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கார் மோதி உயிரிழந்துள்ளார். இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 638 வாகன விபத்துகள் ஏற்பட்டுள்ளன.

அவற்றில் ஆயிரத்து 733 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## வீடு உடைத்துத் திருட்டு மூவர் பொலிஸ் பிடியில்!

யாழ்ப்பாணம், ஒக். 12
உரும்பிராயில் வீடு உடைத்துப் பொருள்கள் திருடிய குற்றச்சாட்டில் மூவர் கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சுமார் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சந்தேகநபரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உரும்பிராய், மூன்றுகோயில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்று உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டிருந்தன. வீட்டிலிருந்தவர்கள் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த சமயம் இந்தத் திருட்டுச் சம்பவம் நடந்திருந்தது. இது தொடர்பாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்றுமுன்தினம் மூவரைக் கைது செய்தனர். அந்த வீட்டில் இருந்து திருடப்பட்ட சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் சுன்னாகம் மற்றும் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## புகைப்பரிசோதனையிலிருந்து விலகவுள்ள தனியார் பஸ்கள்!

கொழும்பு, ஒக். 12
பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் பஸ்கள் புகைப்பரிசோதனையில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளன.

2024ஆம் ஆண்டு முதல் இந்த நடவடிக்கையில் இருந்து விலகுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கொழும்பில் அண்மையில் ஊடகங்களுக்கு அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பஸ்களில் புகைப்பரிசோதனை மேற்கொள்ளப்படாமை மற்றும் தரமற்ற எரிபொருளை பயன்படுத்துகின்றமை போன்ற காரணங்களால் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் போக்குவரத்து அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் இந்த வாரத்தில் அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

அதிக புகையை வெளியேற்றும் வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அண்மையில் தீர்மானம் மேற்கொண்டிருந்தது. கடந்த சில வருடங்களாக பெரும்பாலான வாகனங்கள் அதிகளவு புகையை வெளியிடுகின்றமை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. கறுப்பு புகையை வெளியேற்றும் வாகனங்கள் குறித்து பொது மக்கள் முறைப்பாடு செய்யும் வகையில் வட்ஸ்அப் இலக்கமொன்றும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பாட்டைக் காக்கும் மாவட்டமாக மன்னார்

## வடக்கு இளைஞர் விவகார அமைச்சின் செயலர் தெரிவிப்பு

மன்னார், ஒக். 12

**மண்ணுக்குரிய கலை,கலாசாரம், பண்புகளைத் தொடர்ந்து பேணிப் பாது காத்துவரும் மாவட்டமாக மன்னார் திகழ்கின்றது. எமது சமூக, கலாசார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் அவற்றை மேம்படச் செய்தல் வேண்டும் என்று வடக்கு மாகாண கல்வி, பண்பாட்லுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்டச் செயலகமும், மன்னார் மாவட்ட கலை பண்பாட் டுப் பேரவையும் இணைந்து நடத் திய பண்பாட்டுப் பெருவிழாவில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தவொரு சமூகத்திலும் செல்வாக் குச் செலுத்தும் பிரதான சாதன மாகத் திகழ்வது பண்பாடாகும். பண்பாட்டு மரபுரிமைகள் சமூகத் தின் தனித்துவத்தைக் காட்டும் கண்ணாடியாகும். ஒவ்வொரு பண் பாட்டுக்கும் தனித்துவமான மரபுரி மைகள் காணப்படுகின்றன.

எமது பண்பாட்டைப் பாதுகாப்பதும் அதனை எதிர்காலச் சந்ததியினருக்கு அளிப்பதும் எமது கடமையாகும்.

அந்தவகையில் மன்னார் மாவட்டம் மண்ணுக்குரிய கலை, கலாசாரப் பண்புகளைத் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வரும் ஒரு மாவட்ட மாகத் திகழ்கின்றது. இதனூடாக இங்குள்ள மக்கள் மத்தியில் ஒற்று மையும் காணப்படுகிறது.

எமது பண்பாட்டைப்போலவே மற்றையோரின் பண்பாடுகளையும் பாதுகாக்கவேண்டும். அப்போது தான் தேசிய ஒற்றுமை ஏற்படும் - என்றார். (ச-60)



# முல்லை பேருந்து நிலையம் இம்மாதம் மக்கள் பாவனைக்கு

## 2ஆம் கட்டப் பணிக்காக ரூ.90 மில்லியனும் விடுவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 12

முதலாம் கட்ட வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலை யத்தை எதிர்வரும் 24ஆம் திகதி மக்கள் பாவனைக்கு விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக 90 மில்லியன் ரூபா நிதியும் விடுவிக்கப்படவுள்ளது.

நகரத் திட்டமிடல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் முல் லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தின் முதலாம் கட்ட வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டன.

ஆயினும் பணிகள் பூரணப்படுத்தப்படாமையால் இதுவரை காலமும் பேருந்து நிலையம் மக்கள் பாவ னைக்கு கையளிக்கப்படவில்லை.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், ஜனாதிபதிக்கும் உரிய அமைச்சுக்கும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வந்த தன் பிரகாரம் இரண்டாம் கட்டமாக 90 மில்லியன் ரூபா நிதியை விடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், பிரதேச செயலா ளர், நகர அபிவிருத்தி அதிகாரசபையினர், உள்ளூ ராட்சி அதிகாரசபை, தனியார் போக்குவரத்து மற்றும் அரச போக்குவரத்துச் சபையினர், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட் டோர் நேற்றுமுன்தினம் பேருந்து நிலையத்துக்கு கள விஜயம் செய்து பார்வையிட்டனர். (ச-26)

# கசிப்புடன் இளைஞர் கோப்பாயில் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 12

கோப்பாய்ப் பகுதியில் 5 லீற்றர் கசிப்பை உடைமை யில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக் கமைய இந்தக் கைது இடம்பெற்றது. 32 வயதான இளைஞரே கசிப்புடன் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக வழக்குப்பதிவுசெய்து நீதிமன் றில் முற்படுத்த கோப்பாய்ப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# தேசிக்காய் 100/= யாழில் கிராக்கி

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்.குடாநாட்டில் தேசிக்காய்க்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் அவற்றுக்குத் தட்டுப்பாடும் நிலவுகின்றது என்று நுகர்வோர் தெரிவித் துள்ளனர்.

கடும் வறட்சி காரணமாக தேசி மரங்களில் இந்தமுறை தேசிக்காய் அதிகளவில் காய்க்க வில்லை. அதன் காரணமாக குடாநாட்டுச் சந் தைகளில் அவற்றின் விலை எகிறியுள்ளன.

ஒரு கிலோ தேசிக்காய் தற்போது சந்தைகளில் ஆயிரத்து 200 ரூபாவாக விற்கப்படுகின்றது. அத்துடன் ஒரு தேசிக்காய் 100 ரூபா வரையி லும் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-17)



# இருவேறு குற்றச்செயல்கள் தருமபுரத்தில் முறியடிப்பு!

## மூவர் கைது

கிளிநொச்சி, ஒக். 12

கிளிநொச்சி- தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகு திகளில் இருவேறு குற்றச்செயல்கள் முறியடிக்கப்பட்டு மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் அதிரடிச் சோதனை நடவடிக்கையில் நேற்றுப் புதன்கிழமை இந்தக் கைதுகள் இடம் பெற்றன.

புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக முதிரை மரக்குற்றிகளை ஏற்றிப் பயணித்த கப் ரக வாகனத்தை நெத்தலியாற்றுப் பகுதியில் வைத்து சோதனையிட்டபோது இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

அதேவேளை நெத்தலியாறுப் பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணாக மணலகழ்வில் ஈடுபட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன் டிப்பர் வாகனமும் கையகப் படுத்தப்பட்டது. தடயப்பொருள்களையும் சந்தேக நபர்களையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்தார். (ச-113)

# வடக்குப் பாடசாலைகளுக்கு அவுஸ்திரேலியா நிதியுதவி

யாழ்ப்பாணம், ஒக். 12

வடக்கு மாகாணத்தில் பாடசாலைத் தோட்டங்களை மேற்கொண்டு தெரிவுசெய்யப்பட்ட 67 பின்தங்கிய பாடசாலைகளுக்கு அவுஸ்திரேலிய மக்களின் வரிப்பணத்திலிருந்து அவுஸ்திரேலிய அரசாங்கம் நிதி யுதவி செய்யவுள்ளது.

நாடுமுழுவதும் பாடசாலைகளில் பாடசாலைத் தோட்டத்தை மேம் படுத்துவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தநிலையில் வடக்கு மாகாணத் தில் பாடசாலைத் தோட்டங்களை மேற்கொண்ட தெரிவுசெய்யப்பட்ட 67 பாடசாலைகளுக்குத் தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி யுதவியை அவுஸ்திரேலிய அரசாங் கம் கையளிக்கவுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நிகழ்வு




வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ் தான், நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், வடமாகாண பிரதம செய லாளர் சமன் பந்துலசேன, மாகாணக் கல்வி அமைச்சின் செய லாளர் பற்றிக் டிறஞ்சன், முல்லைத் தீவு மாவட்டச்செயலாளர் அ. உமா மகேஸ்வரன், கல்வி வலய அதி காரிகள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02 . 04 . 1948

மறைவு
12 . 10 . 2022

கடந்த 12.10.2022 இறைபதம் அடைந்த
எமது குடும்ப குல விளக்கு

## திருமதி பாக்கியராசா புனிதவதி

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவாக இன்று (12.10.2023) வியாழக்கிழமை இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

ஆயிரம் உறவுகள்
அவனியில் இருந்தாலும்
அம்மாவின் உறவு போல
ஆருளர் இவ்வுலகில்
அழியா நினைவுகளுடன்
ஆண்டு ஒன்றில்.....

56/11, ஆசாத் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(cs.52464) (N.1)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
27.03.1939



மறைவு
11.10.2023

எமது திணைக்களத்தில் மாவட்ட கடற்றொழில் அலுவலராக
பணிபுரியும் **பரம்சோதி ஜெயசீலன்** அவர்களின் அன்புத்தாயார்

## திருமதி பரம்சோதி ஆச்சிப்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு பிரிவால் துயருறும்
குடும்பத்தின ருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் அத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உதவிப் பணிப்பாளரும், பணியாளர்களும்.
மாவட்ட அலுவலகம்,
கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(cs.26540) (N.1)

## கசிப்புடன் பெண் கைது

யாழ், ஒக்.12

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணிடம் இருந்து ஆயிரத்து 500 மி.லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-125)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மதிமுகமாய்
24 . 08 . 1984



விதிவழியில்
04 . 10 . 2021

நயினாதீவைப் பிறப்பிடமாகவும்
இல. 12 பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி கனிதனா சசிவர்ணன்

திதி: நிர்ணய வெண்பா – 12.10.2023

ஆண்டுகள் இரண்டு கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்....

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இல. 12, பழைய தபாற்கந்தோர் வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்

(cs.52436) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 - 03 - 1939



மறைவு
11 - 10 - 2023

## திருமதி ஆச்சிப்பிள்ளை பரம்ஜோதி

மலேசியாவை பிறப்பிடமாகவும் வசாவிளான் தெற்கு, தெல்லிப்பழை மாத்தனை வைரவர் கோவில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிப்பிள்ளை பரம்ஜோதி நேற்று (11.10.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பரம்ஜோதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான கொல்லன்கலட்டி கந்தையா செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் அனுசியா (பிரான்ஸ்), ஜெயசீலன் (கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் பாலசிங்கம் சஜிகரன் (பிரான்ஸ்), நிகேதினி (ஆசிரியர் யா/ மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, பரமசிவம், பரம்ஜோதி, பத்மநாதன் மற்றும் தங்கப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பரமசிவம், நாகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ராகவி, சாமந்தி, யோகிதா ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தெல்லிப்பழை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் :
ப. ஜெயசீலன்
(மகன்)

(CS 52405 M-1)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



## அமரர் சின்னத்தம்பி செல்லம்மா

கடந்த (14.09.2023) வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர் சின்னத்தம்பி செல்லம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.10.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 14.10.2023 சனிக்கிழமை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

வீதி, கலட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

(cs.52366) (AK.1)

குடும்பத்தினர்
0776157557, 0768959381

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசசார்பற்ற நிறுவனமான ஐ.எம்.எச்.ஓ. கனடாவின் நிதியுதவியில் கிளிநொச்சி உளநல சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாகத் திருமணம் செய்துகொள்ளவுள்ளோருக்கு 3 நாள் உளவளத்துணை பயிற்சி பயிலமர்வு அண்மையில் நடத்தப்பட்டது. எதிர்காலத்தில் பால்நிலைசார் வன்முறையற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனும், ஆரோக்கியமான பால்நிலை புரிதலுடன் கூடிய திருமண வாழ்வை மேம்படுத்தும் நோக்குடனும் இந்த உளவளத்துணை பயிற்சி பயிலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டது. (ச-27)



சங்கானை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆசிரியர்தின நிகழ்வு நடைபெற்றது. கலைமகள் முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பெற்றோர், முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-125)



தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி வரணி பொது நூலகத்தினரால் புத்தகங்கள் காட்சிப்படுத்தலும், வாசிப்பு முகாமும் கடந்த திங்கட்கிழமை கரம்பைக் குறிச்சி அ.த.க. பாடசாலையில் நடத்தப்பட்டது. (ச-9)



தொழில்முனைவுடன் கூடிய பாடசாலைத் தோட்டங்களின் மதிப்பீட்டின் பிரகாரம் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு மல்லாவி மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவசாயக் கண்காட்சியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில் கிளிநொச்சி வடக்கு வலய மட்டத்தில் பளை தர்மக்கேணி அ.த.க.பாடசாலை முதலிடம் பெற்றது. (ச-9)



யாழ்.மாவட்டத் திரிசாரணர் குழாமின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் குருதிக்கொடை முகாம் அண்மையில் கொட்டடி முத்தமிழ் வீதியிலுள்ள முன்பள்ளியில் நடைபெற்றது. (ச-66)



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர் தேசிய செயலகத்தின் அனுசரணையில் தென்மராட்சிப் பிரதேச பொருளாதாரம் நலிவுற்ற 23 முதியோர்களுக்கு கட்டில், மெத்தை, நுளம்பு வலை, தலையணை உள்ளிட்ட பொருள்கள் பிரதேச செயலாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-9)



படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல சட்டத்தரணியுமான அமரர் மு.ஆலாலசுந்தரத்தின் 38 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேவை

**Medi Help Caregiver Service,**
**நோயாளிகள், படுக்கை நோயாளிகள், டிமென்ஷியா நோயாளிகளை**
அனுபவமிக்க பராமரிப்பாளர்களினால் பராமரிக்கப்படும்.

சேவைக்கு **0777126860 / 59**



## சாவகச்சேரி
## பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## விண்ணப்பம் கோரல்

சங்கத்தினால் பின்வரும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பபடிவத்தினை ரூபா 20/= செலுத்தி பெற்று பூரணப்படுத்தி பிறப்புச்சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழின் பிரதிகளுடன் 27.10.2023ம் திகதிக்கு முன்னதாக "பொதுமுகாமையாளர், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து), கண்டி வீதி, சாவகச்சேரி." எனும் முகவரிக்கு தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக் கப்படல்வேண்டும்.

பதவி : விற்பனை உதவியாளர் தரம் - 308/17
சம்பள குறியீட்டு இல : 308/17 ( சுற்.நிரு இல: 01/2021)
சம்பள அளவுத்திட்டம்: ரூபா 16515 – 130 x 10 - 145x10- ரூபா 19265 (சுற்று நிருப இல 02/2022) இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சுற்றறிக்கை 02/2022க்கு அமைய இதர படிகளும் வழங் கப்படும்.

**தகைமைகள்:**

**அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08ந் தர கல்விச் சான்றிதழ்.**

வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது) சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு கூட்டுறவுச்சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப் பித்தல் வேண்டும். இப்பதவிக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப் பதாரர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து பிணை சங்கத்தில் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்,**
**சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்,**
**கண்டி வீதி சாவகச்சேரி.**
10.10.2023

(CS 40754) (AK - 1)


### சீனக்...

சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கி அண்மையில் இலங் கையுடன் கடன்களை தீர்ப்பது தொடர்பான உடன்படிக்கையை எட்டியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூயர், அது தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார்.

இலங்கைக்கும், கடன் வழங்கிய நாடு களுக்கும் இடையே பேச்சுக்கள் நடை பெறுகின்றது என்பதை நாம் அறி வோம். ஆனால் விசேட இணக்கப்பாடு கள் தொடர்பாக எதுவும் எமக்கு அறிவிக் கப்படவில்லை என்று அவர் தெரிவித் தார்.

அதேவேளை, இலங்கைக்கான சர்வ தேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கு இலங்கை கடன் மறுசீரமைப்பை மேற் கொள்வது கட்டாயமானதாகும். இலக் கான பிரதான கடன் வழங்குநர்களில் ஒன்றான சீனா, கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இழுத்தடிப்பை மேற் கொண்டு வருகின்றது என்றும், அத னால் சர்வதேச நாணய நிதியத்தின் கட னுதவி இழுபறியில் உள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில் சீனா தொடர்பான கடன் களை நிவர்த்தி செய்வதற்கு சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி அண்மை யில் இலங்கையுடன் ஆரம்ப உடன்படிக் கைக்கு வந்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை செய்தி வெளியிட்டிருந்தன. (அ-எ-இ)

### இந்தியப்...

இணைந்து கடிதம் ஒன்றை அனுப்பவுள் ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரது இல்லத்தில் கட்சித் தலைவர்கள் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடிதத்தை உடனே அனுப்புவதா? இல்லையா? என்பது தொடர் பாக எதிர்வரும் 7ஆம் திகதி ஒன்றுகூடித் தீர்மானம் எடுக்க வுள்ளோம். இன்று (நேற்று) சில கட்சித் தலைவர்கள் வர வில்லை.

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கின்றது. நாட்டின் தற் போதைய நிலைமை தொடர்பாகவும் தமிழ் மக்களின் நிலைமை தொடர்பாகவும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் இந்தியப் பிரதமருடன் பேசுவதற்கு ஆர்வமாக இருக்கின்றோம்.

தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் இணைந்து இதை முன் னெடுத்துள்ளோம். கட்சித் தலைவர்கள் அனைவரும் சம்மதித் தால் இது முழுமையான செயல்வடிவம் பெறும் - என்றார்.

அதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு முன்னரும் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஒன்றுக்கு மேற்பட்ட கடிதங் களை அனுப்பியுள்ளன. ஆயினும் அவற்றால் ஏற்பட்ட விளை வுகள் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் எவையும் இதுவரை பகிரங் கப்படுத்தவில்லை. (அ-எ-125)

### பல்கலைக்கழக...

தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக மாணவர் விடுதிகளில் பகிடி வதைகள் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்டறியும் நோக் குடன் இந்தச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சோதனை நடவடிக்கைகளை மாணவ ஆலோசகர்களே முன்னெடுப்பார்கள் என்றும், பகிடிவதைகளைத் தடுப்பதற்குப் பல்கலைக்கழகங்களில் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (அ-எ-6)


## மரண அறிவித்தல்



தோற்றம் 13 - 05 - 1935

மறைவு 10 - 10 - 2023

### திருமதி தங்கம்மா பூதப்பிள்ளை

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வவுனியா வெளிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா பூதப்பிள்ளை அவர்கள் கடந்த (10.10.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம், பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற பூதப்பிள்ளை ஆசிரியர் அவர்களின் அன்புமிக்க மனைவியும் அமரர்களான வைத்தியலிங்கம், கந்தையா, விஸ்வலிங்கம், வீரவாகு, இளையதம்பி, செல்லத்துரை, நடேசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சரஸ்வதி, நந்தினி, குகதாசன், காலஞ்சென்ற பவானி, ஜெயமணி, சிவதாசன், காலஞ்சென்ற தயாநிதி, வாசுகி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஏகாம்பரம், காலஞ்சென்ற செல்வரத்தினம், லோகேஸ்வரி, சோமசேகரம், சுதர்சினி, யோகராஜா, சிவபாலராஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பாலேந்திரா, அனுஷா, நிரோஷா, வைகுந்தன், செந்தூரன், கோகிலன், தேவப்பிரியா, அரவிந்தன், கஜன், ஜெயராம், காலஞ்சென்ற வர்ஜன், சிந்துஜன், அனித்தா, யோதீசன், யோகீசன், பவதாரணி, தர்ஷா, கிரிவாசன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் சுஜினா, சுஜானா, சுஜிந்தன், ஹரிராம், சாஹரி, கம்சிதா, ஐசக், ஓவன், ஹென்றி, நவிரா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வெளிக்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



தோற்றம் 02 - 07 - 1947

மறைவு 11 - 10 - 2023

### சின்னையா திருச்செல்வம்

( ஓய்வு நிலை ஆசிரியர் )

அரியாலையை பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா திருச்செல்வம் ( ஓய்வுநிலை ஆசிரியர்) நேற்று (11.10.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சின்னத்தங்கம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் அன்னம்மா தம்பதியினரின் மருமகனும் சறோயாவின் அன்புக் கணவரும் துஷ்யா (ஆசிரிய ஆலோசகர் , வலயக்கல்வி அலுவலகம், தீவகம்), துஷானந் (சாரதி, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), துஷாமினி (ஆசிரியர், யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), துஷாயினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புவியரசி (மு.சே.உ மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), ராஜ்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்துறை திணைக்களம், சாவகச்சேரி), சர்வானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஓவியா, அக்ஷேத்திரா, தக்சன்யா, சாய்கவி, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் மங்கயற்கரசி, அமிர்தலிங்கம், திருஞானசெல்வம், செல்வராசா, இராஜநாயகி ஆகியோரின் சகோதரனும் பாஸ்கரன், ஸ்ரீதரன், கமலாகரன், தயாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2023) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் தெற்கு, சின்னத்தா இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தல்ல உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**077 1113967**
**077 7110445**
**077 2365372**

தகவல் :
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவின்...

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்துள்ள அவர் நேற்று அங்கு உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாத்தியமற்ற திட்டங்கள் - தீர்க்க முடியாத கடன்கள் தொடர்பாக இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் தெளிவாக இருக்க வேண்டும். இந்தத் திட்டங்களின் பின்னால் உள்ள அபாயங்களை நாடுகள் உணர்ந்துகொள்ளவேண்டும் .

இதை மேற்கு நாடுகள் சீனாவின் கடன் பொறி இராஜதந்திரம் என்று வர்ணிக்கின்றன. ஐ.நா. தீர்மானத்தின்படி இந்து சமுத்திரப் பிராந்தியம் ஒரு திறந்த சுயாதீனப் பிராந்தியமாக இருக்கவேண்டும் - என்றார்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைமைப் பதவி இதுவரையில் பங்களாதேஷிடம் இருந்து. தற்போது தலைமைப் பதவி இலங்கைக்கு மாறியுள்ளது. இந்தநிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்த அறிவுரையுடன் கூடிய எச்சரிக்கையை விடுத்துள்ளார். (அ-எ-6)

## ஒட்டோச்...

கின்றது என்று தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையம் முன்பாக மு.ப. 11 மணிளவில் இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது. தங்களின் கோரிக்கை அடங்கிய மனுவை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஙக்யளிப்பதற்காக அவர்கள் ஊர்வலமாக ஸ்ரீதர் தியேட்டரைச் சென்றடைந்தனர். ஆயினும் அமைச்சர் வேம்படி மகளிர் கல்லூரியில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொள்ளச் சென்றிருந்ததால், அங்கு சென்று தங்கள் கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர். (அ-எ-26)

## சைக்கிளில்...

பயணித்தஇவர்தவறிக்கீழேவீழ்ந்துள்ளார். பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.(அ-எ-26-100)

## நஷீரின்...

அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. அலி சாஹிர் மௌலானா அடுத்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர் நஷீர் அஹமட்டை கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்குவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எடுத்த தீர்மானம் செல்லுபடியாகும் என்று உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்திருந்தது. அதையடுத்து நஷீர் அஹமட் தனது நாடாளுமன்ற பதவியை இழந்துள்ளார். (அ-எ-44)

## உள்ளவற்றையும்...

இலங்கைக் கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு எச்சரித்துள்ளது.

இணையத்தளம் ஊடாக உடனடியாகக் கடன் வழங்குவோருக்குத் தனிப்பட்ட விவரங்களைப் பொதுமக்கள் வழங்கக்கூடாது என்றும் கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல, "இணையம் ஊடாக கடன் வழங்கும் மோசடிகள் அதிகரித்துள்ளன. இவை தொடர்பாகக் கடந்த மாதங்களில் 100 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன" என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரச மற்றும் தனியார் வங்கிகளைவிடவும் குறைவான வட்டிவிகிதங்களை இவை வழங்குகின்றன. குறைந்தளவு ஆவணங்களே கோரப்படுவதால் மக்கள் இந்தக் கடன் மோசடிக்குள் சிக்கிக்கொள்கின்றனர். 5 ஆயிரம் ரூபா முதல் 10 இலட்சம் ரூபாவரை குறைந்த வட்டியுடன் கடன் வழங்கப்படுகின்றது.

இந்த நிறுவனங்கள், தாம் வழங்கும் இணைப்பு மூலம் பதிவு செய்து கொள்ளுங்கள் என்று பொதுமக்களை வற்புறுத்துகின்றன. கைத்தொலைபேசியில் தங்களின் செயலியைப் பதிவிறக்கிக் கொள்ளவும் அறிவுறுத்துகின்றன.

அந்தச் செயலி பயநருடைய கோப்புக்கள், தொடர்பு எண்கள், அழைப்புப் பதிவுகள் போன்றவற்றை அணுக அனுமதி கோரும். பயநர்கள் அனுமதிவழங்கியவுடன் அந்தத் தகவல்களைச் செயலி திரட்டிக் கொள்ளும். அதன்பின்னர் கடன் வசூலிப்பின்போது அவற்றைக் கொண்டு பயநர்களுக்கு மிரட்டல் விடுக்கப்படுகின்றது.

பயநரின் கைபேசியில் உள்ள தொடர்பு எண்களையும் அந்த நிறுவனம் தொடர்பு கொள்வதுடன், கடன் பெற்றவர் தொடர்பான அவதூறுகளைப் பரப்பும். கடனைச் செலுத்தும்வரை பயநர்களைத் தொந்தரவு செய்வதுடன், அவர்களை சங்கடப்படுத்தும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும்.

எனவே இணையம் ஊடான கடன்களுக்கு விண்ணப்பிக்க வேண்டாம் என்பதுடன், இவ்வாறான செயலிகளைத் தங்கள் கைபேசிகளில் மக்கள் பதிவிறக்கிக் கொள்ளவும் வேண்டாம். இவ்வாறான செயலிகளை பதிவிறக்கியிருந்தால் அவற்றை நீக்குவது மட்டும் போதுமானதல்ல. கைபேசியை முழுமையாக மீட்டமைக்க (reset) வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே தரவுகளை அணுகுவதைத் தடுக்கமுடியும்.

தேசிய அடையாள அட்டைகள், கடவுச்சீட்டு நகல்கள், பிறப்புச் சான்றிதழ் நகல்கள் மற்றும் ஒரு முறை பயன்படுத்தும் கடவுச்சொற்கள் (OTP) போன்ற முக்கியமான தனிப்பட்ட மற்றும் நிதி அல்லது வங்கி விவரங்களை தெரியாத நபர்களுடன் மக்கள் பகிரக்கூடாது - என்றார்.

அதேவேளை, இந்தியாவில் நடக்கும் இவ்வாறான மோசடிகள் தொடர்பாக சர்வதேச ஊடகமான பி.பி.சி. புலனாய்வு செய்துள்ளது. மக்களை உடனடிக் கடன் செயலி வலையில் வீழ்த்தி, அவர்களை மிரட்டியும் அவமானப்படுத்தியும் பணம் பறிக்கும் ஒரு பெரிய மோசடி நடந்து வருகிறது. இந்தச் செயலிகளுக்காக பணியாற்றும் கடன் வசூலிப்பு முகவர்களின் துன்புறுத்தலால், இதுவரை குறைந்தது 60 இந்தியர்கள் தங்களது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர் என்று பி.பி.சி. கூறுகின்றது. (அ-எ-இ)

## சந்தேகநபர்களை...

விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களை சந்தேகநபர்களாகப் பெயரிடவேண்டும் என்று சிறுமி சார்பாக நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த வழக்கு மேலதிக நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவால் அடுத்த மாதம் 7ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாகச் சேர்க்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் இடதுகை மணிக்கட்டுக்குக் கீழ் அகற்றப்பட்டது. விடுதியில் கடமையில் இருந்தவர்களின் கவனவீனமே இதற்குக் காரணம் என்று பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் பெற்றோர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 3 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது. சிறுமியின் துண்டிக்கப்பட்ட கையை மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பவும் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, அகற்றப்பட்ட கை தொடர்பான மருத்துவப் பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கை மன்றுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

சிறுமி சார்பாக நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், இந்த வழக்கை முன்னோக்கிக் கொண்டு செல்ல வசதியாக வழக்குடன் தொடர்புடையவர்களைச் சந்தேகநபர்களாகப் பெயரிட நீதிமன்றம் அனுமதிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். சந்தேகநபர்களைக் குறிப்பிடுவதன் ஊடாக இந்த வழக்கை விரைவாக முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்றும் அவர்கள் நீதிமன்றில் சுட்டிக்காட்டினர்.

அறிக்கைகளை விரைவாக நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதிவான், வழக்கை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். சிறுமியின் சார்பாக சட்டத்தரணிகள் சர்மினி பிரதீபன் மற்றும் லக்சன் செல்வராஜா ஆகியோர் முன்னிலையாகினர். (அ-எ-26-125)

## இலங்கை...

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதுடன், வீட்டுத் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தனர்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் கூட்டம் இலங்கையில் நடைபெறுகின்றது. அதில் கலந்துகொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கை வந்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

10 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான திட்டத்தின் நான்காவது அத்தியாயத்தின் கீழ் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 1.026 மில்லியன் ரூபாவை 2.8 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கான ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் 9 திட்டங்களை நிறைவு செய்வதற்கு அவசியமான மேலதிக ஒதுக்கீடுகளை இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளது. அதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

வடக்கு மாகாணத்தின் 27 பாடசாலைகளை மேம்படுத்தல், மன்னார் மற்றும் அநுராதபுரம் வீடமைப்புத் திட்டங்கள், ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் புஸ்ஸலாவை சரஸ்வதி மத்திய கல்லூரியின் அபிவிருத்திப் பணிகள், பொலநறுவையில் பல்லின -மும்மொழிப் பாடசாலையொன்றை நிர்மாணித்தல், யாழ்ப்பாணத்தில் மழை நீரை சேகரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழான 2 ஆயிரத்து 889 நிர்மாணிப்புகள், தம்புள்ளையில் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கான 5 ஆயிரம் மெற்றிக் தொன் கொள்ளளவுடைய குளிரூட்டி வசதிகள் அமைத்தல், மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குப் புதிய சத்திரசிகிச்சை பிரிவொன்றை நிறுவுதல் போன்ற வேலைத்திட்டங்கள் இந்த ஒப்பந்தத்தின் கீழ் நிறைவு செய்யப்படவுள்ளன.

இலங்கையின் தேசிய பால் உற்பத்தியை பலப்படுத்தும் வகையில் இந்தியாவின் குஜராத் கூட்டுறவு பால் விற்பனை சம்மேளனம் (அமுல் குழுமம்) மற்றும் இலங்கையின் கார்கீல்ஸ் கூட்டு வர்த்தக நிறுவனம், இந்திய தேசிய பாலுற்பத்தி ஊக்குவிப்பு சபை ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ள கூட்டு வேலைத்திட்டத்துக்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கை - இந்திய உறவுகளுக்கு 75 வருடம் பூர்த்தியாவதைக் குறிக்கும் விசேட நினைவுச் சின்னமொன்றும் வெளியிடப்பட்டது. (அ-எ-44)

## ரணிலுக்கு...

எந்தளவு அவருடன் தொடர்ந்து செயற்படலாம் என்பது அவருடன் பேசிய பின்னரே தெரியவரும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் நேற்று ஊடகங்கங்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொடுத்த வாக்குறுதிகளை ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றவில்லை. செப்ரெம்பர் மாதம் செய்வேன் என்று கூறியிருந்த பல விடயங்களை இன்னமும் அவர் செய்யவில்லை. நான் இதைக் குறையாகச் சொல்லவில்லை.

ஜேர்மனிய ஊடகத்துக்கு வழங்கிய ரணில் விக்கிரமசிங்கவின் செவ்வியைப் பார்க்கின்றபோது, அவரது அரசியல் நிலைப்பாடு மாற்றமடைந்து வருவது போன்று தெரிகின்றது. தமிழ் மக்களின் வாக்குகள் தேவை என்ற அடிப்படையில் பலதைச் செய்வேன் என்று அவர் இதுவரை கூறிவந்தார். தற்போது சிங்கள மாற்றுச் சிந்தனையாளர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகத் தனது கருத்துகளை மாற்றுகின்றார் போன்று தெரிகின்றது.

பல உண்மைகளை அவருக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். இன்னமும் பதில் வழங்கப்படவில்லை. வாக்குறுதிகளை வழங்கிப் பின்னர் நிறைவேற்றாது விடுவது அவர்களுக்குப் பழகிய விடயம். நான் கண்ணை மூடிக்கொண்டு ரணிலுக்கு ஆதரவு கொடுப்பவன் கிடையாது. ரணிலுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவது என்பது அவரது செயற்பாட்டைப் பொறுத்தே உள்ளது.

அவர் பதவிக்கு வந்தது முதல் அவருடன் இணைந்து பல விடயங்களை முன்னெடுத்திருக்கின்றேன். எமது அறிவு, பின்னணி என்பவற்றுக்கு ஏற்பக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளேன். எதிர்காலத்தில் இது தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்ளமுடியும் - என்றார். (அ-எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வல்லுநர் சங்கத்தால் மன்னாரில் மரதன் ஓட்டம்

மன்னார், ஒக். 12

மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆண்,பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப்போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மன்னாரிலுள்ள பாடசாலை மாணவர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், விளையாட்டு அமைப்புகள் உட்படப் பலர் பங்குபற்றும் வகையில் இந்த மரதன் ஓட்டப்போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும், இரண்டாம் இடத்தைப் பெறுபவர்களுக்கு 10ஆயிரம் ரூபா பணப்பரிசும் , மூன்றாம் இடத்தைப் பெறுபவர்களுக்கு 5ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் பங்கேற்கவிரும்பும் 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் ஆவணங்களை மன்னார் மாவட்ட செயலகத்தில் சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது. (ச-213)

# யாழ். மத்திய கல்லூரியில் உடற்பயிற்சிக்கூடம் திறப்பு



யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உடற்பயிற்சி கூடத் திறப்பு விழா கல்லூரி முதல்வர் சி. இந்திரகுமார் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்த ஆகியோர் கலந்துகொண்டு உடற்பயிற்சிக் கூடத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தனர். வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், கல்வி அதிகாரிகள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-26)


மணமகள் தேவை

சுவிஸ் பிரஜாவுரிமையுடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு 37 - 42 வயதிற்கிடைப்பட்ட மணமகள் உடனடியாகத் தேவை.

தரகர்களும் தொடர்புகொள்ளலாம்

தொடர்பு: 076 243 3787

Whatsapp - +41779678559

(CS52466) (AK - 1)


# யாழ்.ரத்னா விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய யாழ்.ரத்னா விருதுக்கு கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட 60 வயது பூர்த்தியடைந்தவர் களும் இதுவரை விருதைப் பெற்றுக் கொள்ளாதவர் களும் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுப் பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையை சான்றுபடுத்தும் ஆவணப்பிரதிகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்தார். (ச)




ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna


# ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவுநாள்

யாழ்ப்பாணம், ஒக். 12

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவின் நிறைவுநாள் நிகழ்வு நேற்று புதன்கிழமை ஆசிரியர் கலாசாலை முன்றிலில் இடம்பெற்றது.

முன்பள்ளிச் சிறார்களின் மதங்களைப் பிரதிபலிக்கக் கூடிய வகையிலான கலை நிகழ்வுகளுடன் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கலந்துகொண்டார். நிகழ்வில் கலாசாலை ஆசிரியர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து நூற்றாண்டு மலர் வெளியீடும் முத்திரை வெளியிடலும் இடம்பெற்றன. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சின் செயலாளர் ரணசிங்க, வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஜோன்குயின்ரஸ், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பழைய அதிபர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலர் நிகழ்வில் பங்கேற்றனர். (ச-27)


மரண அறிவித்தல்

தோற்றம் 14 • 04 • 1942



மறைவு 10 • 10 • 2023

திரு. சுந்தரம்பிள்ளை சச்சிதானந்தம்

(வியாபாரி, கைலாசபிள்ளையார் கோவிலடி)

நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுந்தரம்பிள்ளை சச்சிதானந்தம் (வியாபாரி. கைலாசபிள்ளையார் கோவிலடி) நேற்றுமுன்தினம் (10.10.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுந்தரம்பிள்ளை வள்ளிப்பிள்ளை அவர்களின் மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் இராசமணி அவர்களின் மருமகனும். காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம். கோபாலபிள்ளை. மற்றும் திருமதி கனகம்மா. காலஞ்சென்றவர்களான விசயலட்சுமி. நாகேஸ்வரி மற்றும் திருமதி அன்னலட்சுமி. திருமதி விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும். திருமதி வசந்தா அவர்களின் அன்புக் கணவரும். கஸ்தூரி. சிவசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும். திரு.குகநேசன். ஆனந்தவல்லி ஆகியோரின் அன்பு மாமனாரும். அஸ்வினா. ஐஸ்வர்யா. கார்த்திகேயன். ஜெயகீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல.467. செம்மணி வீதி. நாயன்மார்கட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தொடர்புகளுக்கு: 071 138 6122

cs.52460 (N.1)

தகவல்: குடும்பத்தினர்.


மயிலத்தமடு - களிமடுக்குளத்தில்

# சிங்களக் குடியேற்றவாசிகள் அத்துமீறிய நெல் விதைப்பு

## தமிழ் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலைமை

மட்டக்களப்பு, ஒக்.12

மயிலத்தமடு களிமடுக்குளம் பகுதியில்சிங்களக் குடியேற்றவாசிகளால் அத்துமீறி நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பில் உள்ள 44 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெற் செய்கை மேற்கொள்ள முடியாத அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தமிழ் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடுவில் உள்ள களிமடுக்குளம் பகுதியில் அத்துமீறிய சிங்கள பயிர்ச்செய்கையாளர்களால் நேற்றுப் புதன்கிழமை நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தமிழ் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

சிங்களக் குடியேற்றவாசிகளால் அத்துமீறிய நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது என்று தமிழ் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில், பொத்துவில் முதல் பொலிகண்டிவரை பேரெழுச்சி இயக்கத்தின் இணை தலைவர் சீலன் சிவயோகநாதன் தெரிவித்ததாவது:-மட்டக்களப்பு பகுதியில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக கால்நடைகளை மேய்ச்சலுக்காகக் கொண்டு செல்லும் பகுதியிலேயே தற்போது சிங்களக் குடியேற்றவாசிகளால் அத்துமீறிய நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிக்கு கால்நடைகளை இடம்மாற்ற முடியாத நிலைக்கு தமிழ் பண்ணையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் பண்ணையாளர்களால் கால்நடைகள் இடம்மாற்றம் செய்யப்படாவிட்டால் மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி, வந்தாறுமூலை, கிரான், வவுணதீவு மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய கமநல சேவையாளர்பிரிவுகளுக்குட்பட்டு காணப்படும் 44 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களில் தமிழ் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் -என்றார். (எ-100)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.